## அமெரிக்காவின் கருப்பர் இன வரலாற்றைவிட,

# வீரியமிக்க வரலாறு, நம் திராவிட இயக்க வரலாறு!

## அமைச்சர் க. பொன்முடி நூல் வெளியீட்டு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!

சென்னை,அக்.27-

**சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் மற்றும் வனத்துறை அமைச்சர் பொன்முடி அவர்கள் எழுதிய `திராவிடர் இயக்கமும் கருப்பர் இயக்கமும்' எனும் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.**

இந்த நூலை தி.மு.கழகத் தலைவர் , தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட, திராவிடர் கழகத் தலைவர் அய்யா கி.வீரமணி அவர்கள் பெற்றுக் கொண்டு வாழ்த்திப் பேசினார்.

முன்னதாக விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விழாவுக்கு வந்திருந்தவர்களை, வரவேற்று சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

கழகத்தலைவர் - முதலமைச்சர் அவர்களே, கழகத்தின் பொதுச் செயலாளர் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்களே, மற்றும் வந்திருக்கக்கூடிய கழக நிர்வாகிகளே உங்கள் அனைவருக்கும் இனிய மாலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் வனத்துறை அமைச்சர் அண்ணன் பொன்முடி அவர்களின் `திராவிட இயக்கமும், கருப்பர் இயக்கமும்' என்ற நூல் வெளியீட்டு விழாவில் வரவேற்புரை ஆற்றுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

அண்ணன் பொன்முடி அவர்கள், தமிழ்நாட்டில் தோன்றிய திராவிட இயக்கத்தையும், அமெரிக்காவில் தோன்றிய கருப்பர் இயக்கத்தையும் ஒப்பிட்டு, 30 வருடங்களுக்கு முன்பே டாக்டர் பட்டத்துக்கான (பி.எச்.டி) ஆய்வைச் செய்திருக்கிறார். அதை, தி திரவிடியன் மூவ்மென்ட் அண்ட் தி பிளாக் மூவ்மென்ட் (The Dravidian Movement And The Black Movement) என்ற ஆங்கில நூலாக வெளியிட்டார். அதற்கு நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்அவர்கள் அணிந்துரை எழுதி இருந்தார். அந்தப் புத்தகம் தமிழ் மொழிப்பெயர்ப்பு நூலாக இன்றைக்கு `திராவிடர் இயக்கமும் கருப்பர் இயக்கமும்' (தமிழில்: அசதா) என்ற தலைப்பில், நம் முதலமைச்சர் அவர்களால் இந்த மேடையில் வெளியிடப்பட இருக்கிறது.

### புத்தக வெளியீட்டு விழா

நான் கழகத்தில் இப்போது இளைஞர் அணிச் செயலாளர். இப்போது எனக்கு ஒரு கூடுதல் பொறுப்பும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதாவது வரவேற்பு அணிச் செயலாளர் என்ற ஒரு அறிவிக்கப்படாத பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுள்ளேன் என்று நம்புகிறேன். ஏனென்றால், கடந்த ஒரு மாத காலத்தில் இது எனக்கு மூன்றாவது புத்தக வெளியீட்டு விழா, வரவேற்புரை.

### `கலைஞர் எனும் தாய்'

அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்கள் `கலைஞர் எனும் தாய்' நூல் வெளியீட்டு விழாவில், வரவேற்புரை ஆற்றுகின்ற வாய்ப்பைப் பெற்றேன். அதன் பிறகு, அண்ணன் திருச்சி சிவா அவர்களின் நூல் வெளியீட்டு விழாவில், வரவேற்புரை வழங்குகின்ற வாய்ப்பையும் பெற்றேன். அந்த வரிசையில், இன்று அமைச்சர் அண்ணன் பொன்முடி அவர்களின் புத்தக வெளியீட்டு விழாவிலும், வரவேற்கின்ற வாய்ப்பைக் கொடுத்தமைக்காக அமைச்சர் அண்ணன் பொன்முடி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில், கழக நிர்வாகிகளின் நிகழ்ச்சிகளில் எனக்குத் தொடர்ந்து இந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்றால், அதை நினைத்து மிகவும் பெருமை அடைகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன். உங்களுக்கெல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.




### கழகத் தலைவர் கோரிக்கை

கழகத்தில் உள்ள மூத்த அமைச்சர்கள், நிரிவாகிகள் தங்களின் அனுபவங்களை, நூல்களாக வெளியிட வேண்டும் என்று நம் கழகத் தலைவர் அவர்கள் கோரிக்கையை வைத்திருந்தார்.

அதைத் தொடர்ந்து கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு மாமா அவர்கள், மறைந்த மாமா முரசொலி செல்வம் அவர்கள், அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்கள், கழகக் கொள்கைப் பரப்புச் செயலாளர் அண்ணன் சிவா அவர்கள், கழகத் துணைப் பொதுச்செயலாளர் அண்ணன் ஆ.ராசா உள்ளிட்டோர் போல், அந்த வரிசையில் இன்றைக்கு அமைச்சர் பொன்முடி அவர்களும் நூல்களை வெளியிட்டு இருக்கிறார்.

### அரசியல் வழிகாட்டி

இந்த நூல்கள் கழக இளைஞர்களுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு இளைஞர்களுக்கும் நம் இயக்கத்தின் வரலாற்றைக் கொண்டுபோய் சேர்க்கும். இந்த நூல்கள் நம் இளைஞர்களுக்கான ஓர் அரசியல் வழிகாட்டி என்றுக்கூடச் சொல்லலாம்.

அண்ணன் பொன்முடி அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்புத்தம்பி. கழகத் தலைவர் அவர்களின் தோளோடு, தோள் நிற்கின்ற உற்றநண்பர். எனக்கு, என்னைப் போன்ற பல இளைஞர்களுக்கு சிறு வயது முதலே ஒரு சிறந்த வழிகாட்டி.

### விழுப்புரம் மாநாடு

நம் தலைவர் அவர்களின் தலைமையில் முதன்முதலாக ஒரு மாநாடு நடந்தது என்றால், அது விழுப்புரத்தில் அண்ணன் பொன்முடி அவர்களின் ஏற்பாட்டில், 2003-ஆம் ஆண்டு நடைபெற்ற விழுப்புரம் மாவட்ட மாநாடுதான். அதேமாதிரி எனக்கும் ஒரு பெருமை இருக்கிறது.

இன்று தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர், அதற்கு முன்பும், இப்போதும் விளையாட்டுத்துறை அமைச்சராக ஏராளமான விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைக்கின்ற வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன். ஆனால், 2004-ஆம் ஆண்டிலேயே நம் தலைவர் அவர்களின் பெயரில், அமைந்திருக்கின்ற `தளபதி நற்பணி மன்றம்' மூலமாக அமைச்சர் அண்ணன் பொன்முடி மற்றும் இன்றைய விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் அருமை சகோதரர் கௌதம் சிகாமணி ஏற்பாட்டில், விழுப்புரத்தில் நடந்த மாநில அளவிலான `சட்டில் காக் டோர்னமென்ட்' போட்டியைத்தான் முதன்முதலில் தொடங்கி வைத்தேன். அதுதான் என் பொது வாழ்வில், நான் துவக்கி வைத்த முதல் நிகழ்ச்சி.

அதற்கு அண்ணன் பொன்முடி அவர்களுக்கும் கௌதம்சிகாமணி அவர்களுக்கும் இதுவரை நன்றி தெரிவித்ததில்லை. இந்த மேடையை நன்றி தெரிவிப்பதற்காகப் பயன்படுத்திக் கொள்கிறேன்.

### நிறவெறி– சாதிவெறி

களத்தில் மட்டுமல்ல, கொள்கையிலும் மிகவும் உறுதியானவர் என்பதற்குத்தான் அவரது `திராவிட இயக்கமும் கருப்பர் இயக்கமும்' நூலே ஒரு சாட்சி.

அமெரிக்காவில் நிறவெறியை எதிர்த்து, `கருப்பினர் இயக்கம்' போராடியது. அதே போல இங்கு சாதி வெறியை எதிர்த்து, கருப்புச் சட்டை போட்டு `திராவிட இயக்கம்' போராடியது. இன்றும் போராடிக் கொண்டு இருக்கிறது.

மனித உடலின் மேற்தோல் மூலம் கண்ணுக்குத் தெரிகின்ற நிறவெறியைவிட, கண்ணுக்கே தெரியாத சாதிவெறி மிக மிகக் கொடுமையானது. பல நாடுகளில் கருப்பு நிறத்தை ஓர் இழிவாக நினைத்தார்கள். ஆனால், அதே கருப்பு நிறத்தைப் புரட்சிக்கான அடையாளமாக மாற்றியவர், நம் தந்தை பெரியார் அவர்கள்.

### உரிமைதான் பெரியது

`திராவிடர் இயக்கம்' பகுத்தறிவை நம்புகிறது. `கருப்பர் இயக்கம்' மதத்தை நம்புகிறது என்று இந்த ஆய்வு நூலுக்கான அணிந்துரையில், நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதி இருக்கிறார். திராவிடர் இயக்கத்தைப் பொறுத்தவரை மதத்தை விடம் மனிதர்களின் உரிமைதான் பெரியது.

இந்த நேரத்தில், ஒரேயொரு சின்ன வரலாற்றை மட்டும் சொல்லி, வரவேற்பு உரையை நிறைவுசெய்ய விரும்புகிறேன். அமெரிக்காவில், 1955-ஆம் ஆண்டு வெள்ளை இனத்தவர்கள் பேருந்தில் நின்றால், உட்கார்ந்து இருக்கின்ற கருப்பினத்தவர்கள் எழுந்து நின்று, தங்களின் இருக்கையை விட்டுக் கொடுக்க வேண்டும். ஆனால், கருப்பு இனத்தவரான ரோசா பார்க் என்பவர், இடம் கொடுக்க மறுக்கிறார். அதை குற்றம் என்று சொல்லி, காவல்துறையினர் கைது செய்கிறார்கள்.

### போராளியாக மாறுகிறார்

மிகப்பெரிய போராளியாக ரோசா பார்க் அவர்கள் மாறுகிறார். அவரது கைதை எதிர்த்து, கருப்பின மக்கள் மிகப்பெரிய போராட்டத்தை நடத்தினார்கள். அந்தப் போராட்டத்தின் வெற்றிக்குப் பிறகு அமெரிக்காவில் பேருந்துகளில் கருப்பின மக்கள் சமமாக நடத்தப்பட்டார்கள், உட்கார வைக்கப்பட்டார்கள். இதற்கு இணையான ஒரு நிகழ்வு தமிழ்நாட்டிலும் நடந்திருக்கிறது.

நீதிக் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான டபிள்யூ. பி.ஏ.சௌந்தரபாண்டியன் அவர்கள் தந்தை பெரியாரின் மீது மிகுந்த அன்பும் மதிப்பும் கொண்டவர். அந்த நீதிக்கட்சித் தலைவரின் பெயரில்தான், தியாகராய நகரில் `சௌந்தர பாண்டியனார் அங்காடி உருவாக்கப்பட்டது. இதில் என்ன கொடுமை என்றால், நம் நீதிக் கட்சி தலைவர் சர் பிட்டி தியாகராயர் பெயரில் உள்ள தியாகராயர் நகர் இன்றைக்கு டி.நகர் என்று சுருக்கப்பட்டிருக்கிறது. சௌந்தரப் பாண்டியன் அங்காடியை இன்றைக்கு `பாண்டி பஜார்' என்று நாம் அனைவரும் அழைத்துக் கொண்டிருக்கிறோம்.

### உரிமம் ரத்து

1928-30 ஆம் ஆண்டு கால கட்டங்களில் இராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவராக சௌந்தரபாண்டியன் அவர்கள் இருந்தார்கள். அப்பொழுது ஒடுக்கப்பட்ட, பட்டியல் இன மக்களைப் பேருந்துகளில் ஏற்றாத கொடுமை இருந்தது. அந்தக் கொடுமையைத் தடுக்க சௌந்தரபாண்டியன் அவர்கள் ஒரு உத்தரவை இட்டார்கள். அதன்படி, `ஒடுக்கப்பட்ட, பட்டியல் இன மக்களைப் பேருந்துகளில் ஏற்றாமல் போனால், உடனடியாக அந்த பேருந்துகளுக்கான உரிமம் ரத்து செய்யப்படும்' என்று அவர் அறிவித்தார்.

அமெரிக்காவில் 1955-ஆம் ஆண்டு கருப்பின மக்கள் போராட்டம் நடத்தி, பேருந்துகளில் உட்காருகின்ற அந்த உரிமையைப் பெற்றார்கள். ஆனால், நம் தமிழ்நாட்டில் அதற்கு 25 ஆண்டுகளுக்கு முன்பே போராட்டம் எதுவுமே இல்லாமல் பேருந்துகளில் சம உரிமையை நிலைநாட்டியவர் திராவிட இயக்கத்தின் சௌந்தரபாண்டியன் அவர்கள். அன்றைக்குப் பேருந்துகளில் ஏற, நீதிக் கட்சி தலைவர் உத்தரவு போட்டார் என்றால், இன்றைக்கு அனைத்து சாதி மக்களும் கோவில் கருவறைக்குள் அர்ச்சகராக முடியும் இன்று உத்தரவு போட்டவர், நம் முதலமைச்சர் அவர்கள்.

அதேபோல் பேருந்துகளில் பெண்கள் கட்டணம் இல்லாமல் பயணிக்கலாம் என்ற விடியல் பயணம் திட்டத்தைத் தந்தவர், நாட்டிலேயே முதல்முறையாக அறிமுகப்படுத்தியவர், நம் முதலமைச்சர் அவர்கள். எனவே, அமெரிக்காவில் நடந்த கருப்பினப் போராட்டத்தை விட, வீரியமான வரலாறு கொண்டதுதான் நம் திராவிட இயக்கம்.

### கடைசி உடன்பிறப்பு

சில பேர் இன்றைக்கு திராவிட இயக்கத்தை எப்படியாவது ஒழித்து விடலாம். திராவிட என்கிற வார்த்தையை நீக்கி விடலாம் என்று முயற்சி செய்துகொண்டு இருக்கிறார்கள். அதற்கு தமிழ்நாட்டு மண்ணில் ஒருபோதும் இடம் கிடையாது. கருப்பு, சிவப்புக் கொடி இருக்கின்ற வகையில், கலைஞரின் கடைசி உடன்பிறப்பு இந்த மண்ணில் இருக்கின்ற வரையில், தலைவரின் கரம் பிடித்து நடக்கும் நாம் அனைவரும் இருக்கும் வரையில், பாசிஸ்டுகள், சங்கிகளின் கனவு ஒருபோதும் தமிழ்நாட்டில் பலிக்காது என்பதை, இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அந்த உணர்வுக்கு மேலும் வலுசேர்க்கின்ற வகையில், `திராவிட இயக்கமும் கருப்பர் இயக்கமும்' என்ற நூலை அமைச்சர் அண்ணன் பொன்முடி அவர்கள் தமிழில் கொண்டு வந்திருக்கிறார். இந்தச் சிறப்புக்குரிய நூலை வெளியிடும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வருக, வருக என வரவேற்கிறேன்.


### வரவேற்கிறேன்

இந்த நூலின் முதல் பிரதியைப் பெற வருகை தந்துள்ள `திராவிட இயக்கத்தின் திசைக்காட்டி' திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் அய்யா அவர்களையும் வரவேற்று மகிழ்கிறேன். இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு தலைமை ஏற்றுள்ள கழகப் பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் மாமா அவர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன். ஊடகவியலாளர், திராவிட இயக்க எழுத்தாளர் அண்ணன் சுபகுணராஜன் அவர்களையும் இந்த இனிய நிகழ்வுக்கு வரவேற்று மகிழ்கிறேன்.

அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், நம் தோழமை இயக்கங்களின் தலைவர்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கிறேன். கழகத்தின் ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகளையும், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிரிவாகிகள், உறுப்பினர்களையும், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

நீதியரசர்கள், அரசு உயர் அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் அனைவரையும் அன்போடு வரவேற்கிறேன். பத்திரிக்கை மற்றும் ஊடக நண்பர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன். அனைத்திற்கும் மேலாக முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகள் அத்தனைப் பேரையும் வருக, வருக என வரவேற்று வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.10.2024) முகாம் அலுவலகத்தில், மதுரையில் கனமழை பெய்து வருவதையொட்டி, காணொலி காட்சி மூலம், அமைச்சர் பெருமக்கள், அரசு உயர் அலுவலர்களுடன் மழை பாதிப்பு குறித்தும், மீட்பு நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்து, உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள கேட்டுக்கொண்டார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.பெ.அமுதா, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மா.சௌ.சங்கீதா, மதுரை மாநகராட்சி ஆணையாளர் ச.தினேஷ்குமார் ஆகியோர் பங்கேற்றனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் உள்ள கொய்யாத்தோப்பு பகுதியில் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புக்கு பதிலாக, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் புதிய அடுக்குமாடி குடியிருப்பை கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. ரூபாய் 61.20 கோடி மதிப்பில், 324 வீடுகளுடன் இந்த குடியிருப்பு அமையவுள்ளது. இதற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கியுள்ள நிலையில், அதனை நேற்று முன்தினம் நேரில் ஆய்வு செய்தார்.